தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tanu.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22-4-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## <u>தேங்காய் விலை சீராக இருக்கும்</u>

இந்தியாவில் 2012-13ல் தென்னை 2.13 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 15.35 மில்லியன் டன்கள் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசின் கணக்கீட்டின் படி இந்தியாவில் 2012-13 ன் உற்பத்தி முந்தைய வருடத்தை விட 2.72 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இந்திய அரசின் வேளாண் அமைச்சகத்தின் முதல் கணக்கீட்டின்படி, தமிழ்நாடு தென்னையின் பரப்பளவு மற்றும் உற்பத்தியில் முறையே 21.81 சதவிகிதமும் 31.02 சதவிகிதமும், பங்கு வகிக்கிறது.

தமிழ்நாட்டில் பொள்ளாச்சி சந்தையில் முதன்முறையாக 2011ம் ஆண்டு, தேங்காய் கிலோவிற்கு 13 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்தது. மார்ச் 2013ல் 7 ரூபாய் என்ற விலைக்குக் குறைந்தது. கோடையில் வரத்து அதிகம் என்பதால் சந்தை வல்லுநர்கள் விலையில் ஏறுமுகம் இருக்காது என்கின்றனர். தற்போதைய சந்தை நிலவரங்களைக் கருத்தில் கொள்ளும்போது உடனடி விலை ஏற்றம் இருக்காது என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைத் தகவல் மையம், தேங்காயின் சந்தை விலைகளை ஆய்வு செய்தது. அதன் படி 2013 ஏப்ரல் முதல் ஜுன் வரை தேங்காய் ஒன்றின் பண்ணை விலை, தேங்காயின் அளவைப் பொறுத்து ரூ.4.5-6.5 வரை இருக்கும் என முன்னறிவிப்பு செய்யப்படுகிறது. விலை ஏற்றத்திற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு எனவே விவசாயிகள் தேங்காய்களை சேமிக்காமல் உடனடியாக விற்பனை செய்யலாம் எனப் பரிந்துரைக்கப்படுகின்றனர். 600 கிராமிற்கும் அதிகமான எடையுள்ள காய்களுக்கு நல்ல விலை கிடைக்கும். 100 கிலோவில் சராசரியாக 150 காய்

இருக்கும். இந்த முன்னறிவிப்பு பொள்ளாச்சி சந்தையின் நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டது. இச்சந்தையில் விலை சற்று அதிகம். மற்ற சந்தைகளில் பண்ணை விலை சற்று குறைவாக இருக்கும்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி: 0422-2431405


**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-**


பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி: 0422-6611284.


மக்கள் தொடர்பு அலுவலர்